**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.**

CC.1077/2024

PW1: சுசீலா

த/பெ: பெருமாள்

**மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

அ.சா.ஆ.8 ல் கண்ணால் பார்த்த சாட்சியாக உள்ள குருசாமி என்பவைர நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் உள்ள புகார்தாரர் வெள்ளைபாண்டி என்பவரை விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. அ.சா.ஆ.8 ல் பணி செய்யும் போது கை தவறி வளையம் கீழே விழுந்து விபத்து ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் விபத்து ஏற்பட்ட நேரம் காலை 09.45 மணி என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. எனது ஆய்வின் படி விபத்து ஏற்பட்ட நேரம் 09.30 மணி இருக்கலாம். அ.சா.ஆ.9 ன் படி குருமூர்த்தி என்பவருக்கு குழு காப்பீடு மூலமாக ரூ.50,000/- இழப்பீடு கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. அந்த ஆவணத்தில் குருமூர்த்தியின் முகவரி அனுப்பன்குளம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. கோவிந்தராஜின் முகவரி செவல்பட்டி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். செவல்பட்டிக்கும் அனுப்பன்குளத்துக்கும் இடையே சுமார் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் எனக்குத் தெரியாது. அ.சா.ஆ.9 ல் குருமூர்த்தி மற்றும் கோவிந்தராஜின் உறவினர்கள் 19.09.2024 அன்று பணியின்போது எதிர்பாராமல் விபத்து ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ.6 ல் ஆட்டோ டிரைவரான கோவிந்தராஜ் குருமூர்த்தியை போன் மூலம் அழைத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். குருமூர்த்தியின் போன் நம்பர் கோவிந்தராஜுக்கு எப்படித் தெரியும் என்று விசாரிக்கவில்லை. பட்டாசு தொழிற்சாலையின் அனைத்து அறைகளின் கதவுகளையும் திறக்கும் பணி போர்மேனுடையது. அ.சா.ஆ.6 ல் பொன்னுச்சாமி சாவி கொடுத்ததாகச் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். போர்மேனிடம் இருக்கவேண்டிய சாவி பொன்னுச்சாவியிடம் எவ்வாறு சென்றது என்று விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. மேற்படி பொன்னுச்சாமியை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட அறை White Powder Mixing Shed. அந்த அறையில் மருந்துக் கலவையை மிக்ஸிங் மட்டும் செய்ய வேண்டும். எனது ஆய்வறிக்கையில் மிக்ஸிங் அறையில் மருந்து நிரப்பப்பட்ட புஸ்வானம் மற்றும் சக்கர வெடிகள் இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். Filling Shed-ல் இருக்க வேண்டிய வெடிபொருட்கள் எவ்வாறு கலவை அறைக்கு சென்றதாக விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை, கலவை அறையில் தான் மருந்தும் நிரப்புவார்கள், இது சட்டப்படி தவறு. இதை குருமூர்த்தியிடம் விசாரித்து தெரிந்துகொண்டேன். இதை ஒரு குற்றமாக குற்ற அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் தனிக்குற்றமாகச் சொல்லவில்லை. குருமூர்த்தியிடம் வாக்குமூலம் பெறும்போது அவர் வாக்குமூலம் பெறத் தகுதியானவர் என்று மருத்துவரிடம் சான்று பெறவில்லை. அவர் கொடுத்த வாக்குமூலத்தை வீடியோ பதிவு செய்தோமா என்றால் பதிவு செய்துள்ளோம், அதை ஆவணமாகத் தாக்கல் செய்யவில்லை. குருமூர்த்தியின் வாக்குமூலத்தில் சொன்னவைகளை உறுதிப்படுத்த என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால்

அதற்கான ஆவணங்களைத் தாக்கல் செய்துள்ளேன். குருமூர்த்தியின் வாக்குமூலத்தில் பல்லி எச்சமோ அல்லது ஆணி கீழே விழுந்தாலோ விபத்து ஏற்பட வாய்ப்புள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அன்றைய பயன்பாட்டிற்கு எத்தனை கிலோ மருந்துகள் பயன்படுத்தப்பட்டது என்பதற்கு ஸ்டாக் ரிஜிஸ்டரை ஆய்வு செய்தேனா என்றால் ஸ்டாக் ரிஜிஸ்டர் அங்கு இல்லை. போர்மேனை விசாரித்து வாக்குமூலம் பெற்றேனா என்றால் அவர் நீதிமன்றக் காவலில் இருந்ததால் விசாரிக்கவில்லை. மத்திய வெடிபொருள் கட்டுப்பாட்டு அலுவலரை விசாரித்து கருத்துரை பெற்றேனா என்றால் அதற்கு அவசியம் இல்லை. நான் குருமூர்த்தியிடம் வாக்குமூலம் பெற்றதாக சொல்லும்போது என்னுடன் உதவி இயக்குநர் மற்றும் இறந்தவரின் உறவினர் இருவரும் இருந்தனர். அவர்களை இந்த வழக்கின் சாட்சிகளாகச் சேர்த்துள்ளேனா என்றால் அதற்கு அவசியமில்லை. அ.சா.ஆ.3. ஆய்வறிக்கையில் விபத்து நடந்த அறையில் மருந்து செலுத்திய 100 சோர்சா வளையங்கள் இருந்தது என்றால் சரிதான். மூன்று டிரம்களில் மருந்து கலவைகள் இருந்தது என்றால் சரிதான். வளையத்தில் உள்ள அலுமினிய ரிங்கை ஒரு ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 3 டிரம்களை நான் கைப்பற்றவில்லை. பொதுவாக மருந்துக் கலவை செய்யும் வேலையை காலை 06.00 –10.00 மணிக்குள் முடிக்க வேண்டும் என்றால் சரிதான். அ.சா.ஆ.7 ல் உள்ள புகைப்படத்தில் எத்தனை டிரம்கள் இருக்கின்றன என்றால் 4 டிரம்கள் உள்ளன. அந்த டிரம்களின் நிறம் அலுமினிய நிறம். அந்த டிரம்களில் தீப்பிடித்ததற்கான தடயங்கள் இல்லை என்றால் அந்த டிரம்மில் தான் மருந்துக் கலவை செய்திருக்க வேண்டும் என்று சொல்ல முடியாது. விபத்தின் இடிபாடுகளில் சிக்கியுள்ள டிரம்மின் வடிவமைப்பில் மாற்றமில்லை என்று சொன்னால் அவை விபத்தில் உருண்டு வந்திருக்க வாய்ப்புள்ளது. அதை யாரை விசாரித்து தெரிந்துகொண்டேன் என்றால் எனது அனுபவத்தின் மூலமாக அந்த இடத்தை பார்க்கும்போது தெரிந்து கொண்டேன். பட்டாசு தொழிற்சாலையில் விதிமீறல் அதிகம் இருக்கும் பட்சத்தில் பிரிவு 40(2) ன் படி தடையாணை வழங்குவோம் என்றால் சரிதான். அப்படிப்பட்ட தடையாணை எதிரி நிறுவனத்திற்கு கடந்த 15 ஆண்டுகளாக வழங்கப்படவில்லை என்றால் நான் பணிபுரிந்த 4 ஆண்டுகளில் வழங்கப்படவில்லை. அதை அந்த நிறுவனத்தின் நன்னடத்தையாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 29th Day of June 2026..

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Digitally signed by R V RAJA KUMAR

Digitally signed by R V RAJA KUMAR

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**